வணக்கம் அன்பிற்குரிய திரு. மு.க. ஸ்டாலின் அவர்களே,

தமிழக மக்கள் பேசிவிட்டார்கள், மக்களின் ஒருமித்த குரல் ஒலித்திருக்கிறது. இந்து சமுதாயத்தினர், தனது புனிதமான வழிபாட்டுத் தலத்தை தானே பேணிப் பராமரித்து நிர்வகிக்க, அவர்களுக்கு உண்டான ஜனநாயக உரிமையை அரசு வழங்கவேண்டும் என்று ஒருமித்த குரல் எழுப்பியிருக்கிறார்கள். தமிழக கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பது குறித்தும், அரசின் கட்டுப்பாட்டில் கோவில்கள் அடைந்துள்ள அவலநிலை குறித்தும் கடந்த சில மாதங்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் மனவேதனையை வெளிப்படுத்தியுள்ளார்கள். கோவில்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது குறித்தும் அங்கு நடக்கும் அநியாயங்கள் குறித்தும் பல்வேறு பதிவுகள் பகிரப்பட்டுள்ளன. தமிழகம் முழுக்க, கோவில்களின் அவலநிலை குறித்து பல்வேறு இடங்களிலுள்ள பக்தர்கள் அமைதியான முறையில் கோவில்களில் குழுமி, கோவில்களின் அபாயநிலை குறித்து தங்கள் ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளனர். ஒரு பிரம்மாண்ட இயக்கம் செயல்பாட்டுக்கு வரவிருக்கிறது.

மூன்று கோடிக்கும் அதிகமான மக்கள் ஒரே குரலில், விலைமதிப்பில்லாத கோவில்களின் அவலநிலை குறித்த தங்களது ஆழமான வேதனையையும் ஆற்றாமையையும் பதிவுசெய்துள்ளனர். ஆன்மீகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் மையப்புள்ளியாய் விளங்கும் கோவில்கள் விடுவிக்கப்பட்டு, பக்தர்களின் அன்புக்கரங்களில் ஒப்படைக்கப்பட்டு, கோவில்களை உயிரோட்டமாக்கி அதன் முழு ஆற்றலுக்கு மீண்டும் இயங்கச் செய்யவேண்டும் என்பதே அவர்களின் தீவிர விருப்பமாய் இருக்கிறது. இந்த தகவலை தங்களுக்கு நான் தெரியப்படுத்தும் இவ்வேளையில், மிஸ்டுகால்களும், களத்தில் மக்கள் ஓரிடத்தில் கூடி தெரிவித்த ஆதரவும், சமூக வலைத்தளப் பக்கங்களிலும், இணையதளத்திலும் மக்கள் தெரிவித்த ஆதரவுகள் மட்டுமே கணக்கெடுக்கக்கூடிய வகையில் இருப்பதால், அவற்றை மட்டுமே

Sadhguru

Phone: +91 94430 31955 Email: SadhguruOffice1@ishafoundation.org
Sadhguru Office, Isha Yoga Center, Velliangiri Foothills, Ishana Vihar Post, Coimbatore 641 114

தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம். தமிழ் மக்கள் இதயத்தில் உள்ள வலியை கணக்கெடுக்க முடியாது, அவர்களது வேதனையை புறக்கணிக்கக்கூடிய காலகட்டமும் கடந்தோடி விட்டது. இம்மாநில மக்கள் தங்களது விருப்பத்தை வெளிப்படுத்தியது மட்டுமல்ல, இந்த அதிமுக்கிய சீர்திருத்தத்திற்காக காத்திருக்கும் இந்தச் சமூகத்தை சேர்ந்த ஆன்மீகத் தலைவர்களும், இன்ன பிறரும் துடிப்பாக இவ்வியக்கத்திற்கு ஆதரவு திரட்டி, இந்த ஒரு நோக்கத்திற்காக உறுதியுடன் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம் ஜனநாயகத்தில், அரசியல் எனும் வலிமையான பாதையில் செல்ல முடிவுசெய்து, மக்களின் பிரதிநிதியாய் செயலாற்றி சேவை வாழ்வில் ஈடுபட்டுள்ள தாங்கள், மக்கள் விடுத்திருக்கும் இக்கோரிக்கையை புறக்கணிக்கவோ, கோரிக்கைக்கு செவிமடுக்காமலோ இருக்க இயலாது என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அதனால், தங்களது தலைமையின் கீழ், தமிழ் மக்களிடமே தமிழக கோவில்களை ஒப்படைக்க வேண்டிய உறுதிமொழியினை இச்சூழ்நிலையில் மிக அவசரமாக தாங்கள் வழங்கிட வேண்டுமென்றும், அதன்மூலம் திராவிடத்தின் பெருமைக்குரியவராய், வரலாற்றில் பொறிக்கப்படும் பெருமையையும் பெற்றவராய் தாங்கள் நினைவு கொள்ளப்படுவீர்கள் என்பதும் நிச்சயம்.

மிகுந்த அன்பும் அருளும்,

Much Regards & Blessings

Sadhguru

Phone: +91 94430 31955 Email: SadhguruOffice1@ishafoundation.org
Sadhguru Office, Isha Yoga Center, Velliangiri Foothills, Ishana Vihar Post, Coimbatore 641 114